## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1) கீழ்காணும் சர்வதேச நிறுவனங்களில் எது சமீபத்தில் அணு ஆயுதங்களுக்கான முற்றிலுமான தடையை விதித்தது?

A] Red cross

B] UNESCO

C] UNSC

D] Interpol

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் எட்டாம் தேதி ரெட்கிராஸ் அமைப்பானது அணு ஆயுதங்கள் தடையை முற்றிலுமாக விதித்தது. அனு ஆயுதங்களினால் ஏற்படும் தீமைகளை பற்றிய விழிப்புணர்வை **the international committee of the Red cross and the international federation of Red cross and red crescent society** உடன் இணைந்து நடத்தியது.
- ✓ **Intermediate range nuclear forces treaty 1987** இதனை அமெரிக்கா மற்றும் ரஷ்யா நீக்கியதை தொடர்ந்து அமைக்கப்பட்டதே **notonukes.org** எனும் பிரச்சார அமைப்பு ஆகும்.
- ✓ ஐக்கிய நாடுகள் சபையால் இயற்றப்பட்ட அணு ஆயுதங்களுக்கு எதிரான ஒப்பந்தத்தில் தங்களுடைய நாடுகளை கையெழுத்திடச் செய்வதே இந்த பிரச்சாரத்தின் முக்கிய நோக்கமாகும்.
- ✓ இதுவரையிலும் 70 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு 21 நாடுகள் அதை அமல்படுத்தவும் செய்துள்ளது.

**2)** சமீபத்தில் காலமான ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்ட ஆல்பர்ட் பின்னே எந்த நாட்டைச் சேர்ந்தவர்**?**

**A]** பிரான்ஸ்

**B]** இங்கிலாந்து

**C]** ஜெர்மனி

**D]** இத்தாலி

- ✓ ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்ட நடிகரான ஆல்பர்ட் பின்னே **82** வயதானவர். இவர் கடந்த

- ✓ **7** பிப்ரவரி **2019** ஆம் நாள் லண்டனில் காலமானார். இதுவரையிலும் ஐந்து முறை ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார் ஆவார்.
- ✓ இவர் தனது வாழ்க்கையை ராயல் சேக்ஸ்பியர் கம்பெனி என்னும் நிறுவனத்திலிருந்து தொடங்கினார். இவரது குறிப்பிடத்தக்க கதாபாத்திரங்களை **Saturday night and Sunday morning -1960, Tom Jones -1963, two for the road -1967, Scrooge- 1970, Annie 1982, the dresser -1983, miller's crossing -1990** போன்ற படங்களில் காணலாம்.

**3)** ஜெரமி லால்ரின்ங்கா **(Jeremy Lalrinnunga)** எந்த விளையாட்டு துறையை சேர்ந்தவர்?

**A]** குத்துச்சண்டை

**B]** ஜூடோ

**C]** பளுதூக்குதல்

**D]** மல்யுத்தம்

- ✓ பளுதூக்கும் வீரர் ஜெரமி லால்ரிங்கா மிசோரம் மாநிலத்தை சேர்ந்தவர். **67** கிலோ எடை ஆண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார் மற்றும் தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டியில் **(EGAT cup)**இந்தியாவின் இரண்டாவது மெடலை வென்றுள்ளார்.
- ✓ இவர் **136** கிலோ ஸ்நாட்ச் பிரிவிலும் **157** கிலோ கிளீன் பிரிவிலும் மொத்தமாக **288** கிலோ எடை பிரிவிலும் பங்கேற்றுள்ளார்.
- ✓ இதற்கு முன்னதாக உலக சாம்பியன் சாய்க்கோம் மீராபாய் பெண்கள் **48** கிலோ எடை பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார் மொத்தமாக இவர் **192** கிலோவை தூக்கி உள்ளார்.

**4) Let's talk on air: conversation with radio presenter** என்ற நூலின் ஆசிரியர் யார்?

**A]** ஹிருஷிக்கே கண்ணன்

**B]** அமீன் சயனி

**C]** அனுராக் பாண்டே

**D]** ராகேஷ் ஆனந்த் பக்ஷி

- ✓ ராகேஷ் ஆனந்த் பக்ஷி எழுதிய **let's talk on air: conversation with radio presenter** என்ற நூல் வானொலி வழங்கலுக்கு ஒரு குறிப்பிடத்தக்க உரையாக இருக்கிறது.
- ✓ இந்தப் புத்தகத்தில் வானொலி துறையை சார்ந்த **14** முக்கிய பிரபலங்களின் வாழ்க்கை குறிப்புகளை கூறுகிறது.
- ✓ இதில் அமீன் சயானி முதல் நம்மை மகிழ்வித்து வரும் தற்போது உள்ள ஆர்.ஜே **(RJ)**களை பற்றிய குறிப்புகளும் இதில் அடங்கியுள்ளது.
- ✓ இப்புத்தகத்தில் அமீன் சயானி, யூனிஸ்கான், ரோகிணி, மம்தா சிங், அனுராக் பிக்சர் பாண்டே மற்றும் அன்மோல் பற்றிய குறிப்புகளும் உள்ளது.
- ✓ இப்புத்தகத்தில் வெளிச்சத்திற்கு வராத ஆர்.ஜே களையும் அவர்களது வாழ்க்கை பற்றிய குறிப்புகளும் அடங்கியுள்ளது.
- ✓ இந்த புத்தகத்தை பென்குயின் ராண்டம் ஹவுஸ் என்ற நிறுவனம் வருகிற உலக வானொலி தினமான பிப்ரவரி **13**-ஆம் தேதி மும்பையில் வெளியிட உள்ளது.

**5)** மத்திய விளையாட்டுத் துறை செயலராக புதிதாக நியமிக்கப்பட்டவர் யார்**?**

**A]** ராகுல் பட்நகர்

**B]** ராதா ஷ்யாம் ஜுலானியா

**C]** வினோத் சகாய்

**D]** ப்ரீதம் குமார்

- ✓ **1985** மத்தியப்பிரதேச பிரிவு அதிகாரியான ராதேஷ்யாம் ஜுலானியா புதிய மத்திய விளையாட்டு துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ இவருக்கு முன் ராகுல் பட்நகர் செயலராக பணியாற்றினார். தற்போது இவர் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தில் பணியாற்றி வருகிறார். இதற்கு முன் பட்னாகர் டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஸ்போர்ட்ஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா, இன்டர்நேஷனல் **anti-doping** ஏஜென்சி தலைவராகவும் பணியாற்றி உள்ளார். இவருடைய பதவிக் காலத்தின்போது மத்திய நிதியின் மூலமாக **IIM Rohtak MBA Sports management** தொடங்கியது.

- ✓ மேலும் இவர் பதவிக்காலத்தின்போது விளையாட்டுத்துறை அமைச்சகம் சார்பாக நடத்தப்பட்ட நேஷனல் ஸ்போர்ட்ஸ் யூனிவர்சிட்டி, கேலோ இந்தியா யூத் கேம்ஸ், **hockey world cup** புவனேஸ்வர் மற்றும் உலக பெண்கள் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் புதுடில்லி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

6) பிரான்ஸ் நாட்டின் உயர்ந்த குடிமகனுக்கான விருதை பெற்ற புனித தந்தை பிரான்காய்ஸ் லாபோர்டு எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

A] மேற்கு வங்காளம்

B] அஸ்ஸாம்

C] கோவா

D] மகாராஷ்டிரா

- ✓ மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த **92** வயதான புனித தந்தை பிரான்காய்ஸ் லாபோர்டு மாற்றுத்திறனாளி குழந்தைகள் மீது இவர் ஆற்றிய சேவையின் காரணமாக பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய உயரிய விருதான **Legion of honour** பெற்றுள்ளார்.
- ✓ பிரெஞ்சு நாட்டை பூர்வீகமாகக் கொண்ட இவருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது. இதே மாநிலத்தைச் சேர்ந்த சத்யஜித் ராய் மற்றும் சௌமித்ரா சாட்டர்ஜி இவர்களை தொடர்ந்து மூன்றாவது முறையாக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

7) கீழ்க்காணும் விலங்குகளில் எது பதிமூன்றாவது **cop of the convention on the conservation of migratory species of wild animals** மாநாட்டின் சின்னமாகும்?

**A] great hornbill**

**B] yellow footed green pigeon**

**C] Indian roller**

**D] Great Indian bustard**

- ✓ இந்த மாநாடு வருகிற **15 - 22** பிப்ரவரி **2020** ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள காந்தி நகரில் நடைபெற இருக்கிறது.

- ✓ இந்த மாநாட்டுக்கான சின்னமாக **great indian bustard** என்ற விலங்கை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- ✓ இது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் முகமை **united nations environment programme** கீழ் நிறுவப்பட்ட சுற்றுச்சூழல் ஒப்பந்தம் ஆகும்.
- ✓ இதில் 129 பங்குதாரர்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் பங்கு பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ இடம்பெயரும்விலங்குகளை பாதுகாக்கும் விதமாக அமைக்கப்பட்டதே இந்த மாநாடு ஆகும் இதன் முக்கிய நோக்கம் இடம்பெயரும் விலங்கினங்களை பாதுகாப்பதே ஆகும்.

**8) National Deworming Day -** தேசிய குடல் புழு நீக்க தினம் இந்தியாவில் என்று அனுசரிக்கப்படுகிறது?

**A]** பிப்ரவரி **10**

**B]** பிப்ரவரி **11**

**C]** பிப்ரவரி **9**

**D]** பிப்ரவரி **8**

- ✓ தேசிய குடல் புழு நீக்க தினம், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் ஒரு முயற்சியாகும். இதன் நோக்கம் இந்தியாவில் உள்ள அனைத்து குழந்தைகளும் குடற் புழு தாக்கம் இல்லாமல் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ வழி வகுப்பதே ஆகும்.
- ✓ இந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் பத்தாம் தேதி அனுசரிக்கப்படுகிறது. அங்கன்வாடி மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் குடற்புழு இன்றி ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வது இதன் நோக்கமாகும்.
- ✓ எட்டாவது முறையாக கடந்த பிப்ரவரி மாதம் எட்டாம் தேதி மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் குழந்தைகளிடையே குடற்புழு சோதனை செய்தது. இதில் அங்கன்வாடி மற்றும் பள்ளி செல்லும் ஒன்று முதல் 19 வயதுடைய குழந்தைகளுக்கு **albendazole tablets** என்னும் மாத்திரைகளை வழங்கியது.
- ✓ உலக சுகாதார நிறுவனம் அறிக்கையின்படி இந்தியாவில் 14 வயதுக்கு உட்பட்டவர்களில் 64 சதவீதம் பேருக்கு **Soil transmitted Helminths (STH)** என்ற தொற்று நோய் பரவும் வாய்ப்பு உள்ளதாக

தெரிவிக்கிறது. இந்த எட்டாவது முறையில் **24** கோடி குழந்தைகள் மற்றும் பதின்பருவத்தினருக்கு சோதனை செய்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

**9)** எந்த அண்டை நாடு இந்தியாவுடன் குடிமைப் பணியாளர்கள் பயிற்சிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது?

**A]** நேபாள்

**B]** பங்களாதேஷ்

**C]** பூட்டான்

**D]** மியான்மார்

- ✓ அடுத்த ஆறு வருடங்களுக்கு பங்களாதேஷை சேர்ந்த **1800** குடிமை பணி அதிகாரிகளுக்கு இந்தியா **(National centre for good governance)** நல்லாட்சிக்கான தேசிய மையத்தில் பயிற்சி வழங்குவதாக ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இவர்களுக்கு மின் ஆளுமை மற்றும் சேவை வழங்குதல், மின் சார்ந்த கொள்கை மற்றும் நடைமுறைப்படுத்துதல், தொழில்நுட்பத் துறை, நகர மேம்பாட்டுத் திட்டம், நகர வடிவமைப்பு, ஒழுக்க நெறிமுறைகள் போன்ற போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படும். இது இரண்டாவது முறையாக இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் ஆகும். முதல் முறையாக ஐந்து வருடங்களுக்கு முன்னால் **1500** பங்களாதேஷைச் சேர்ந்த குடிமைப்பணி அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கப்பட்டது.
- ✓ இந்த நல்லாட்சிக்கான தேசிய மையமானது இந்திய அரசின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனம் ஆகும் இதன் தலைமை அலுவலகம் புது தில்லியில் அமைந்துள்ளது நல்லாட்சிக்கான கொள்கைகளை வகுப்பதில் இந்த நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

10) கீழ்க்காணும் எந்த நிறுவனத்தில் மத்திய அமைச்சகமானது அனைத்து நிதி சேவைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கான ஒருங்கிணைந்த அதிகாரத்தை அமைக்க ஒப்புதல் வழங்கி உள்ளது?

**A] RBI**

**B] SEBI**

**C] IFSC**

**D] IRDAI**

- ✓ **IFSC** மசோதா 2019ன் படி மத்திய அமைச்சகம் அனைத்து நிதி சேவைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கான ஒருங்கிணைந்த அதிகாரத்தை ஐஎஃப்எஸ்சி (**IFSC)** அமைக்க ஒப்புதல் வழங்கி உள்ளது.
- ✓ இதன் மூலம் பயனாளிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த சேவையை வழங்க இயலும். மேலும் இது இந்தியாவிலுள்ள பிற **IFSC** நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஒரு உந்துதலாக அமையும்.
- ✓ தற்போது வங்கி சேவை, மூல முதலீடு மற்றும் காப்பீடு போன்றவற்றை **RBI, SEBI and IRDAI** முறையே பராமரித்து வருகிறது. ஆனால் மேம்படுத்தப்பட்ட **IFSC** ஆனது உலகத்தரம் வாய்ந்த லண்டன் மற்றும் சிங்கப்பூரில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு நிகரானதாக அமையும்.
- ✓ இதன்மூலம் இந்திய நிறுவனங்கள் எளிதாக உலகளாவிய வணிக வர்த்தகச் சந்தைகளில் இடம் பெற இயலும். இந்தியாவின் குஜராத், காந்தி நகரில் கிப்ட் சிட்டி என்னும் இடத்தில் முதல் ஐஎஃப்எஸ்சி நிறுவப்பட்டு உள்ளது.

winmeen.com